பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 26 (10—9—68) செவ்வாய் வெளியூர்: ஆவணி 27 (11—9—68) புதன் [இதழ்: 74

முதலமைச்சர்கள் மாநாடு

உணவுக் கொள்கை பற்றி விவாதிக்கும்

புதுடில்லி, செப். 10—
உணவுக் கொள்கைபற்றி விவாதிக்கும் பொருட்டு மாநில முதலமைச்சர்கள் மாநாடு இத்திங்கள் 23, 24 ஆகிய நாட்களில் நடைபெறும் என்று தெரிகிறது.

உணவுத் தானிய நடமாட்டக் கட்டுப்பாடு, உணவுப் பங்கீடு ஆகியவை பற்றியும், அடுத்த ஆண்டுக்குரிய சர்க்கரைக் கொள்கையையும் இம்மாநாடு முடிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்ணா அமெரிக்கா பயணம்

விமான நிலையத்தில் மக்கள் உருக்கமான வழியனுப்பு



கவர்னர்--பெரியார், மற்றும் கட்சித் தலைவர்கள் வழியனுப்பிய காட்சி!

உற்சாகத்துடன் அறிஞர் அண்ணா விமானம் ஏறினார்

சென்னை, செப். 10---

தமிழ்ப் பெருமக்களின் உள்ளத்தில் குடிகொண்டுவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், உடல் நலிவுற்றிருக்கிறார் என்ற செய்தி கேட்டுக் கலங்கி நிற்கும் மக்கள், உடல் நலிவுற்ற நிலையில் அண்ணா அவர்களைக் கண்டதும் கண் கலங்கினர்; முகத்திலே சோகத்தைத் தேக்கி நின்றனர்; ஆனால் அண்ணா அவர்களோ அவர்களுக்கெல்லாம் ஆறுதல் அளிக்கும்வகையில் மிகவும் உற்சாகமாகவே காணப்பட்டார்கள். "கவலைப்பட வேண்டாம்; விரைவில் முழு நலம் பெற்று உங்களிடையே வந்து எப்போதும் போல் இருப்பேன்" என்று சொல்வதுபோல் அண்ணாவின் தோற்றம் இருந்தது.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இன்று பிற்பகல் 2-35 மணிக்கு விமான மூலம் அமெரிக்கா பயணமானார்கள்.

மருத்துவச் சிகிச்சைக்காகச் செல்லும் அண்ணா அவர்கட்கு, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் உருக்கமான வழியனுப்பு நடைபெற்றது.

அண்ணா அவர்களுடன், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், சத்தியவாணிமுத்து, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ஆகியோரும் பம்பாய் வரை செல்கிறார்கள்.

அண்ணாவை வழியனுப்ப ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் தமது துணைவியாருடன வந்திருந்தார்.

தந்தை பெரியார் அவர்களும், தள்ளு வண்டியில் அமர்ந்தபடி விமானக்கூடம் வரை சென்று வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்.

மற்றும், காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் எம்.பி., தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், இராஜா சர் முத்தையா செட்டியார், வி. எஸ். தியாகராச முதலியார், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் எம். கலயாணசுந்தரம், எஸ். எஸ். மாரிசாமி, டாக்டர் ஹண்டே, மேயர் டாக்டர் அபிபுல்லா பேக், குன்றக்குடி அடிகளார், ஆகியோரும் வந்திருந்து வழியனுப்பி வைத்தனர்.

அண்ணா சென்ற அதே விமானத்தில், திரு. எஸ். எஸ். மாரிசாமியும, திரு. சி. சுப்பிரமணியமும செல்கின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள், மற்றும் முக்கிய கழகத் தோழர்கள், மற்றும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் வந்திருந்தனர்.

விமான நிலையத்திற்குள் கட்டணம் செலுத்தி ஆயிரக்கணக்கில் வந்து குழுமியிருந்தவர்கள் அல்லாமல், வெளியிலும், வழி நெடுகிலும் பல்லாயிரக்கணக்கில் கழகத் தோழர்களும் பொதுமக்களும் அமைதியாக நின்று வழியனுப்பி வைத்த காட்சி, மிகவும் உருக்கமாக இருந்தது.

நடந்து சென்றே விமானம் ஏறினார்

அண்ணா அவர்களை நாற்காலியில் உட்கார வைத்தே விமானத்தில் ஏற்றுவதற்கு ஏற்பாடாகியிருந்தது; ஆனால், அண்ணா அவர்கள், யாரும் எதிர்பாராத வகையில் காரிலிருந்து இறங்கி நடந்தே சென்று விமானத்தில் ஏறினார்.

மருத்துவமனையில் மனமுருக்கும் நிகழ்ச்சி

அண்ணா அவர்கள் இன்று பகல் 12-45 மணிக்கு மருத்துவமனையிலிருந்து நுங்கம்பாக்கத்தில் உள்ள தமது இல்லத்திற்குப் புறப்பட்டார்கள்.

புறப்படுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன், திரு. ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் அண்ணாவைச் சந்தித்து உடல் நலம் விசாரித்தனர்.

தங்கிச் சிகிச்சை பெற்ற அறையிலிருந்து அண்ணா அவர்கள் புறப்பட்டு வெளியே வந்ததும் மருத்துவமனையில் பணியாற்றும் டாக்டர்கள், பயிற்சி பெறும் இளம் மருத்துவர்கள், நர்சுகள் உட்பட எல்லா அலுவலர்களும் அண்ணா அவர்கட்குக் கைகூப்பி வணக்கம் தெரிவித்த காட்சி உள்ளத்தைத் தொட்டது.

கூடியிருந்த அனைவரும் 'அண்ணா வாழ்க' என்று முழங்கி வழியனுப்பிவைத்தனர்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள்கூட எழுந்து வந்து அண்ணா அவர்கட்கு வாழ்த்தும் வணச்சமும் கூறி வழியனுப்பி வைத்தனர்.

மருத்துவமனையிலிருந்து சென்ட்ரல் இரயில் நிலையம்வரை மக்கள் பெருந்திரளாகக் குழுமி நின்று கைகூப்பி வணக்கம் தெரிவித்து வழியனுப்பி வைத்தனர்.

அண்ணா அவர்கள் நேரே இல்லம் சென்றடைந்ததும், அங்கு தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

அமைதியுடன் மக்கள் வழியனுப்பிவைத்தனர்

விமானத்தின் கதவை மூடிய பின்னும் விமானம் தரையிலிருந்து மேல் நோக்கிப் பறப்பதற்கு எடுத்துக்கொண்ட நேரம் முழுவதும் மக்கள் கூட்டம் அமைதியுடனிருந்து வழியனுப்பியது.

★

அண்ணாவுடன்....

அண்ணா அவர்களுடன் அண்ணியார், பரிமளம், டாக்டர் சதாசிவம், இரா. செழியன், க. இராசாராம் ஆகியோர் அமெரிக்காவுக்குச் செல்கின்றனர்.

குடியரசுத் தலைவர் அறிஞர் அண்ணாவைச் சந்தித்தார்

சென்னை, செப். 10—

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள், இன்று காலை அண்ணா அவர்களை, அரசினர் பொது மருத்துவமனையில் சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் அண்ணா அவர்களுடன் 5 நிமிட நேரம் பேசிக்கொண்டிருந்தபோது கூறியதாவது:—

"தமிழ் நாட்டில் எனது சுற்றுப்பயணம் மிகவும் நல்ல முறையில் அமைந்தது; நீங்கள் என்னுடன் இல்லாததுதான் குறையாக இருந்தது.

"மக்கள ஒவ்வொருவருடைய இதயமும் தங்களைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கிறது.

"தாங்கள் விரைவில் முழுநலம் அடையவேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கிறோம்."

குடியரசுத் தலைவரின் நல்லுணர்வுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

குடியரசுத் தலைவர், மருத்துவமனை வந்ததும் அவரை அமைச்சர்கள் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

மக்கட் பெருக்கம் கண்டு அஞ்சேல்!

அந்த அளவுக்கு உணவு உற்பத்திக்கும் வழியுண்டு

நவீன முறைகளைக் கையாண்டால் பஞ்சம் தலைகாட்டாது

அனைத்து நாட்டு வேளாண்மை மாநாட்டில் பிரிட்டிஷ் அமைச்சர் விளக்கம்

"உணவு உற்பத்தி, மக்கள் பெருக்கம் இரண்டிற்குமிடையே பெரும் போட்டி நடைபெற்றுவருவது உண்மை; இது மனித குலத்திற்கே பெரும் பிரச்சினையாக இருந்துவருவதும் உண்மைதான்; ஆனால், மக்கள் பெருக்கத்தை ஏதோ ஒரு பயங்கரமான விபதது போலக் கருதிப் பேசிவருவதற்கு அவசியமே இல்லை; 'இதே நிலையில் மக்கள் தொகை பெருகிவந்தால், இன்னும் சில ஆண்டுகளில் உலகமே பஞ்சத்தின் கோரப் பிடியில் சிக்க நேரிடும்' என்றும் சிலர் அபாயக் குரல் கொடுக்கிறார்கள்; இவற்றை நான் ஏற்பதற்கில்லை"

என்று, பிரிட்டிஷ் வெளிநாடுகள் மேம்பாட்டுப் பணி அமைச்சர் திரு ரெஜினால்டு பிரெண்டிஸ், பிரிட்டனில் உள்ள ரீடிங் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் அனைத்து நாட்டு வேளாண்மைக் கருத்தரங்கைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கருத்தறிவித்தார்.

இந்தியா உட்பட 38 நாடுகளைச் சேர்ந்த 220 வேளாண்மை நிபுணர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ள பிரிட்டன் வந்துள்ளனர்.

பிரிட்டிஷ் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"சென்ற ஆண்டு நடைபெற்ற உணவு -- வேளாண்மை நிறுவனத்தின் மாநாட்டில், 'மக்கள் பெருக்கத்தால் உலகம் ஏதோ அழிவுப் பாதை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாக' பேசுவது தவறானது என்று நான் குறிப்பிட்டேன். இந்த ஆண்டு அந்த நிறுவன அறிக்கையும், உணவு, வேளாண்மை நிலைமையும் எனது கருத்திற்குச் சாதகமாக இருப்பதைக் காணலாம்.

"இந்த அறிக்கையின்படி, பல விவசாய நாடுகளில் மக்கள் பெருக்கத்தைவிட உயர்ந்த சதவிகிதத்தில் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது.

1965–66-ம் ஆண்டுகளில் உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்தது உண்மைதான்; ஆனால், இந்த இரு ஆண்டு இழப்பையும் ஈடு செய்யும் வகையில், 1967-ல் உற்பத்தி உயர்ந்து இருந்ததைக் கவனிக்க மறந்து முந்தின இரு ஆண்டுகளின் வாட்டத்தை எண்ணிக் குழம்புகிறார்கள் பலர்.

கவலை வேண்டாம்

"ஆண்டுக்கு ஆண்டு உணவு உற்பத்தி உயர வேண்டியது அவசியம்தான்; மக்கள் பெருக்கத்திலும் ஒரு கட்டுப்பாடு தேவைதான்; கட்டுப்பாடு இன்றி இது பெருகி வருவது குறித்து நாம் அக்கறையற்று இருந்துவிடக்கூடாது என்பதை ஒப்புக்கொள்கிறேன்; ஆனால், சிலர் நினைப்பதுபோல், அது, பெருங் கவலைக்குரியதும் அல்ல.

"பிரச்சினை என்ன என்பது தெரியும்; அதற்குப் பரிகாரம் என்ன என்பதும் தெரியும்; அந்த வகையில் நம்மை முழு அளவில் ஈடுபடுத்திக் கொள்கிறோமா என்று சிந்திக்க வேண்டும்.

நவீன முறை மேற்கொண்டால், உற்பத்தி எந்த அளவு பெருகும்—சில இடங்களில் பெருகியிருக்கிறது—என்பதை நான் உங்களுக்கு விளக்கத் தேவையில்லை. இந்த நவீன முறை பரவலாக்கப்படவில்லை என்றால், அதுகூட இயற்கையின் குற்றம் என்று கூறமுடியுமா?

பொருளாதாரம் பலம் பெற வேண்டுமானால், பல நாடுகளில் விவசாயம் வளர வேண்டியது அவசியம். நாம் விரும்பியது நடந்துவிடும் என்று நினைப்பதோ ஒரே நாளில் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நம்புவதோ காரியம் நடந்திட உதவாது.

வளர்ந்துவரும் நாடுகளுக்குப் பல வகையிலும் உதவி அளிக்கப்பட வேண்டும்; பயிற்சி பெற்ற விவசாய நிபுணர்களை அனுப்பி உதவி செய்யவேண்டும்; நவீன கருவிகள், வளம்சேர்க்கும் உரம், பயிரைப் பாழாக்கும் பூச்சிகளை அழிக்க மருந்து ஆகியவற்றை அந்த நாடுகளுக்குத் தருவதுதான் அந்நாடுகளின் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான சிறந்த வழி. இந்தவகையில் பயிற்சி பெற்ற விவசாயத் துறை நிபுணர்களையும், பிற சாதனங்களையும் அனுப்பிவைக்க பிரிட்டிஷ் அரசாங்கம் தயங்குவதில்லை.

"விவசாயத் துறையில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு என்னென்ன முறை மேற்கொள்ளலாம் என்பது பற்றி இந்தக் கருத்தரங்கில் பயனுள்ள கருத்துக்கள் விவாதிக்கப்படும் என்று நம்புகிறேன்."

இம்மாதம் 14-ந் தேதி வரை நடைபெறவிருக்கும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ள இந்தியாவிலிருந்து 6-பேர் கொண்ட குழு பிரிட்டன் வந்துள்ளது.

இதுவரை ரூ. 5,847 கோடி!

இந்தியா பயன்படுத்திய அமெரிக்க உதவி

புதுடில்லி, செப். 9—

1951 ஏப்ரல் முதல் 1968 மே வரை இந்தியாவுக்கு அமெரிக்க உதவியாக ரூ. 6,361 கோடி அங்கீகரிக்கப்பட்டதில் ரூ. 5,847 கோடி பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை, மொத்த அயல்நாட்டு உதவியைப் பயன்படுத்திக்கொண்டதில் 59.1 சதவிகிதமாகும்.

பல்வேறு நாடுகளிலிருந்தும் மொத்தம் ரூ. 11,896 கோடிவரை அங்கீகரிக்கப்பட்டதில், ரூ. 9,892 கோடி பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இரஷ்யாவின் உதவி ரூ. 1,032 கோடியாகும்; அதில் ரூ. 546 கோடி மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

பிரிட்டனின் உதவியின் ரூ. 620 கோடியில் ரூ. 553 கோடி பயன்படுத்தப்பட்டது.

ஆதாரம்காட்ட இயலாத குற்றச்சாட்டு

அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைத்தனர்

'பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது' என்பதைத் தவிர காங்கிரசு வேறு எதனைச் செய்ய முடிந்தது?

"தமிழக அசெம்பிளியில் காங்கிரசின் எதிர்ப்பு முயற்சி பயன் அளித்ததா?" என்ற தலைப்பில், 'சுதேசமித்திரன்' 8—9—68-ம் நாள் இதழில், அதன் சிறப்பு நிருபர் எழுதியுள்ள கட்டுரையின் சில பகுதிகள் இங்கு தரப்பட்டிருக்கின்றன:—

சென்ற ஆகஸ்டு 16-ந் தேதி முதல் 31-ந்தேதிவரைநடந்த தமிழகச் சட்டசபைக் கூட்டத்தில், கடந்த 20 ஆண்டுகளாக இடைவெளியின்றி ஆளுங் கட்சியாக இருந்த காங்கிரசு, இப்போது எதிர்க் கட்சியாகச் செயல்படுவதில் எவ்வளவு சிரமம் இருக்கிறது என்பதைப் படிப்படியாக உணரத் தலைப்பட்டிருக்கிறது!

தமிழகச் சட்டசபையில் சென்ற ஆகஸ்டு 16-ந் தேதி முதல் 31-ந் தேதிவரை நடைபெற்ற விவாதங்களில் பிரதான அம்சம், தி.மு.க. அமைச்சரவை மீது காங்கிரசு கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானமாகும்.

ஐந்து நாட்கள் நடந்த நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் காங்கிரசார் அடுக்கிவைத்த 11 வகையான குற்றச்சாட்டில் எதையும் நிரூபித்துவிட்டதாகச் சொல்லிவிட முடியாது; பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது; கண்டித்தோம்; வெளுத்து வாங்கினோம்' என்பதைத் தவிர வேறு வேறு எந்தவிதமான திடீர் வெடிகுண்டுகளையும் காங்கிரசு வெடித்துவிடவில்லை!

நன்கொடைகள் வசூலிப்பது சம்பந்தமாகக் காங்கிரசு உறுப்பினர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் அனைத்தும் தங்களையே திரும்பி வந்து தாக்கும் என்பதை அவர்கள் ஆரம்பத்தில் உணர்ந்துகொள்ளவில்லை.

"ஆஸ்பத்திரி கட்டுவதற்குச் சுற்றறிக்கை அனுப்பியது குற்றம் என்றால், உங்கள் காலத்தில் பல்வேறு ஆஸ்பத்திரிகள், பொதுக் காரியங்களுக்காக அரசாங்கம் சுமார் 60 உத்தரவுகள் பிறப்பித்து நன்கொடைகள் வசூலிக்கப்பட்டதே -- அதை எந்தப் பட்டியலில் சேர்ப்பது?" என்று அமைச்சர் மாதவன் கேட்டது, அந்தக் குற்றச்சாட்டு முனை முறிந்து போயிற்று! 'பொதுக் காரியங்கள் எங்கு நடந்தாலும் தமிழகம் முழுவதிலும் நன்கொடைகள் வசூலிப்பதில் தவறில்லை' என்பதுதான் முடிவாயிற்றே தவிர, காங்கிரசாரின் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை!

'உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்கு எங்கே?' என்ற கேள்விக்கு முதலமைச்சர் அண்ணா தெளிவான விளக்கம் ஒன்றை அளித்து அதற்கு முற்றுப்புள்ளி வைத்தார்;—'உலகத் தமிழ் மாநாட்டு ஏற்பாடுகளை மூன்று குழுக்கள் கவனித்தன; வடபாதி மங்கலம் தியாகராச முதலியார் தலைமையில் செயல்பட்ட குழு, தனது கணக்கைச் சமர்ப்பித்தது பத்திரிகைகளில் அது வந்திருக்கிறது; பெருமாள் முதலியார் தலைமையில் பணியாற்றிய மற்றொரு குழு தன் கணக்கை சார்ட்டர்டு அக்கவுண்டண்டு மூலம் தணிக்கை செய்து சமர்ப்பித்துவிட்டது. மாவட்டங்களில் வசூலான பணம் -- உலகத்தமிழ் மாநாட்டுக்குக் கொடுக்கப்பட்டதுபோக -- மீதி அந்தந்த மாவட்ட அபிவிருத்தி நிதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது; இன்னும் என்ன கணக்கு வேண்டும்?' என்று முதலமைச்சர் கேட்டார்.

'கட்டாயப்படுத்தி நிதி வசூலித்தார்கள்' என்ற குற்றச்சாட்டைக் கூறியவர்கள் காட்டிய ஆதாரம், வெறும் நன்கொடை டிக்கெட்டுகள்தான்!

'தி.மு.க. பிரமுகர்கள் வசூலித்தார்கள்' என்று டிக்கெட்டுகளைக் காட்டியவர்கள்கூட, 'வசூலித்த பிரமுகர்கள் மோசடியில ஈடுபட்டார்கள்' என்றோ, 'ஊழல் நடந்திருக்கிறது' என்றோ குற்றம்சாட்ட முடியவில்லை!

தொழில் தகராறுகள், தொழில் அமைதி, புதிய தொழில்கள், தொழிலாளர் கொள்கை போன்ற பிரச்சினைகள், அகில இந்திய ரீதியில் அணுக வேண்டியவை என்பதை முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

"வற்ற மாநிலங்களைவிடத் தமிழகத்தில் தொழில் தகராறுகள் குறைவு" எனபதை, தொழிலாளர் துறை அமைச்சர் மாதவன் புள்ளி விவரங்களுடன் தெளிவாக விளக்கினார்!

மற்றக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் அரைத்த மாவையே அரைப்பது போன்றது.

'அரைப்பதற்கு வேறு எதுவும் இல்லாததாலோ அல்லது தனது கைவலியைக் காட்டுவதற்காகவோ காங்கிரசார் தொடர்ந்து இதே குற்றச்சாட்டுக்களைக் கூறிவருகிறார்கள்' என்பதை முதலமைச்சர் தெளிவாக விளக்கினார்!

★

'தமிழ் நாடு' பெயர் மாற்ற மசோதா, தி.மு.க.-விற்கு ஒரு பெரும் இராஜதந்திர வெற்றி!

காங்கிரசார் உள்ளூரில், தமிழ் நாடு பெயர் மாற்றம் செய்தார்கள். தி. மு. கழகம், அரசியல் சட்டத்திலேயே பெயர் மாற்றம் செய்யும் சூழ்நிலையை உண்டாக்கிவிட்டது!

சட்டசபை ஆரம்பித்த தினமான ஆகஸ்டு 16-ந்தேதி, காங்கிரசுக் கட்சி வெளிநடப்புச் செய்தது. பரபரப்புடன் கூட்டத் தொடர் ஆரம்பிப்பதற்கு வெளிநடப்பு சிறந்த சாதனம்தானே!

"உடையார்பாளையம் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு நீதி விசாரணைக்கு உத்தரவிட்ட முதலமைச்சர், சென்னையில் ஆகஸ்டு முதல் தேதியன்று நடத்திய ஊர்வலத்தில் நடந்த தடியடிக்கு விசாரணை எதையும் மேற்கொள்ளவில்லையே?" என்பது காங்கிரசின் கேள்வி!

தடியடி சற்றுக் கடுமைதான் என்றாலும், 'போலீசார் வேண்டுமென்றே தாக்குதலில் ஈடுபட்டார்கள்' என்பதற்குக் காங்கிரசுத் தரப்பிலிருந்து யாரும் மறுக்க முடியாத ஆதாரங்களைக் காட்டவில்லை!

20 ஆண்டுக்கால காங்கிரசு ஆட்சியின் கண்மூடித்தனம்!

நாட்டுக்கு இழைத்துள்ள பெரும் அநீதி!

"முதலில், திட்டத்தின் பெயரால் மூடத்தனம் தெளிவாக்கப்பட்டது; 12 ஆயிரம் கோடி ரூபாயைத் திட்டத்திற்கு முதலீடு செய்தார்கள்; ஆனால், அந்தப் பணத்திற்கு அரை சதவிகிதம் கூட வட்டி திரும்பப் பெறப்படவில்லை;—பெரும்பாலும் நட்டக் கணக்கையே காட்டின!

"அடுத்து எந்தத் துறைக்கு முதலிடம் தருவது என்பதில் மூடத்தனத்தைக் காட்டினர்; ராக்கெட் வேகத்தில் வரிகளை உயர்த்திவிட்டு, தொழில் உலகத்தையே சீர்குலையச் செய்துவிட்டனர்!

"அடுத்து வெளிநாட்டுக் கடன் பற்றிய மூடத்தனம்; ஐயாயிரம் கோடி ரூபாய்க்கு வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றனர்; அதற்கு வட்டியைக்கூட தர முடியவில்லை; மேலும் மேலும் கடன் வாங்கினர்; 'திவால் ஆகத்தான் போகிறோமே -- அதிகக் கடனாவது வாங்குவோம்' என்ற முறையில் கடன் வாங்கினர்!

"நமது அயல்நாட்டுக் கொள்கையின் மூலம் உலகில் ஒரு நண்பனைக்கூட நம் அருகில் அணுக விடவில்லை!

"சீனாவும் பாகிஸ்தானும், ஒன்று சேர்ந்து நம்மைத் தாக்கத் துணிகின்றன; 'வெள்ளையர்களை எதிர்த்த நமக்கு அவர்கள் இருவரும், ஈ, கொசுவைப் போன்றவர்கள்' என எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

"அடுத்து, ஆங்கிலத்தை அறவே அகற்றிவிடும் முயற்சி நடக்கிறது; அதோடு, 'இந்தித் திணிப்பு' எனும் மூடத்தனமும் நடக்கிறது; 'இந்தி மொழி' என்பது, வடநாட்டு மாநிலங்களிலேயே ஒரு மாநிலத்திற்கு இன்னொரு மாநிலம் வேறுபடும் மொழி! வங்காளி மொழியைவிட -- தமிழ் மொழியைவிட -- மராத்தி மொழியைவிட -- குறைவான இலக்கியத் தகுதி கொண்டது; அந்த மொழியைத் திணிக்கும் முயற்சி நடக்கிறது."

—'மெயில்' இதழ் (7—9—68) கட்டுரையிலிருந்து.

மாவட்டந்தோறும் விளையாட்டு அரங்குகள்

தமிழக அரசு திட்டம் -- கல்விஅமைச்சர் விளக்கம்

பாளையங்கோட்டை, செப். 9—

"விளையாட்டுகளை ஊக்குவிக்க மாவட்டந்தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி -- அதில் வெற்றிபெற்றவர்களை அழைத்துச் சென்னை மாநகராட்சி ஸ்டேடியத்தில் பொங்கல் நாளன்று விளையாட்டு விழா நடத்துவதெனத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது; இதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகின்றன"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பாளையங்கோட்டை மருத்துவமனை அருகில் விளையாட்டு அரங்கம் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டி உரையாற்றுகையில் அறிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றிக் கூறியதாவது:—

"ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் இதுபோன்ற விளையாட்டு அரங்கு ஒன்றைக் கட்டுவதற்கு மாவட்ட விளையாட்டுக் குழுமூலம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ 1-இலட்சம் மானியமாக அரசு வழங்கும்; வேலூர், மதுரை, நீலகிரி, மற்றும் பல இடங்களிலும் இத்தகைய திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

"அரசு ஊழியர்களும், மாணவர்களும் சிரமணியில் சேர்ந்து, விளையாட்டு அரங்கு நிர்மாணப் பணியில் உதவ முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"பொதுமக்கள் விளையாட்டில் பங்கு கொண்டும், விளையாடுபவர்களை ஊக்குவித்தும் உற்சாகம் காட்டவேண்டும்.

"கிரேக்க நாட்டில், விளையாட்டுகளுக்கு முதலிடம் அளிக்கப்பட்டது; அவர்களுடைய நாட்டின் சிலைகளைப் பார்த்தாலே இது நன்கு விளங்கும்; எனவே, உடல் உறுதிபெற, விளையாட்டுகளில் இளைஞர்கள் ஈடுபாடு கொள்ள வேண்டும்."

விழாவிற்கு கலெக்டர் இராசேந்திரன் தலைமை தாங்கினார்.

‘வாக்குரிமைச் சக்தி’யைச் சீர்குலைக்க முனைகின்றனர்

காங்கிரசுக்குப் பெரு முதலாளிகள் தந்த பணம் எவ்வளவு?

“இன்றையக் கம்பெனிகள் சட்டத்தின்படி, ஒவ்வொரு கம்பெனியும், தனது இலாபத்தில் ஐந்து சதவிகிதத்தை, கட்சிகளுக்கு நன்கொடையாகத் தரலாம்.

“குறிப்பிட்ட சில கம்பெனிகள், ஓராண்டில், சில கட்சிகளுக்கு ரூ. 15-கோடி தரமுடியும்.

“ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு ரூ. 5-இலட்சம் என்றும், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ரூ. 1-இலட்சம் என்றும் தரலாம்.

“இதன்படி, காங்கிரசுக் கட்சியும் -- காங்கிரசு வேட்பாளர்களும், கடந்த பொதுத் தேர்தலின்போது, ரூ. 60-கோடி இந்த வகையில் செலவு செய்துள்ளனர்.

“முதலாளித்துவக் கம்பெனிகளின் பாதுகாப்பும் நலனும், எதிர்கால வளர்ச்சியும் இலாபமும், காங்கிரசுக் கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருப்பதில்தான் இருக்கிறது; ஆகவேதான், ‘காங்கிரசு வெற்றிபெறுவது அவசியம்’ என்று அந்தக் கம்பெனிகள் பகிரங்கமாகவே கூறியுள்ளன.

“பொதுமக்களில் வயதுவந்தோருக்கு வாக்குரிமை தந்ததால், ‘அந்தச் சக்தியின் எதிர்ப்பு எங்கே தங்கள் பக்கம் திரும்பிவிடுமோ’ என்பதற்காகத்தான் அந்தப் பெரு முதலாளிகள், தங்கள் பண பலத்தால் அந்தச் சக்தியைச் சீர்குலைக்க முனைந்துள்ளனர்!”

—‘பிளிட்ஸ்’ ஏடு (7—9—68) கட்டுரையிலிருந்து

வங்கத் தமிழர் சங்கத் தலைவர்

கல்கத்தா திரும்பினார்

கல்கத்தா-அவுராவில் இயங்கி வரும் வங்கத் தமிழர் சங்கத் தலைவரும், அண்ணா மலர்க் குழுத் தலைவருமான திரு. டி.என். தங்கதுரை அகில உலகக் கலாச்சாரக் கழகத்தின் அழைப்பின்பேரில், இந்தியாவிலிருந்து சென்ற கலாச்சாரக் குழுவில் உறுப்பினராக இரஷ்யா, செக்கோஸ்லோவேகியா, ஹங்கேரி, போலந்து, டென்மார்க், நார்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் ஒரு மாதத்திற்கு மேலாகச் சுற்றுப்பயணம் செய்து 3—9—68 மாலை 4 மணிக்கு விமானம் மூலம் கல்கத்தா டம்டம வந்து சேர்ந்தார். சங்கத் துணைச் செயலாளர் செ. வீரபத்திரன், மற்றும் பல அமைப்புகளின் சார்பில் மாலையணிவித்து வரவேற்கப்பட்டார்.

பட்டுக்கோட்டை அண்ணா மன்றம்

பட்டுக்கோட்டையில் அண்ணா மன்ற உறுப்பினர் கூட்டம் 18—8—68-ல் நடைபெற்றபோது, சு. சத்தியானந்தம் தலைவராகவும், எம். பக்கிரிசாமி செயலாளராகவும், கோ. தேவராசன் பொருளாளராகவும், மற்றும் சா. கோபாலகிருட்டினன், நா. சாமிநாதன், ப. பாலகுரு, சா. வில்லியம், கே. சீனிவாசன், செ.மு.சு. அசிசு, ஆர். குமாரசாமி, கி. அய்யாக்கண்ணு, சா. நடராசன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மணற்பாங்கான 2 கோடி ஏக்கர் நிலம்

கடல் நீர்மூலம் சாகுபடி செய்ய இயலும்

பவநகர், செப். 8—

இந்தியாவில் 3,500 மைல் நீளமுள்ள கடற்கரையை யொட்டிய பகுதியில், மணற்பாங்கான 2 கோடி ஏக்கர் நிலத்தைக் கடல் நீர்ப்பாசன உதவியால் சாகுபடிக்குக் கொண்டு வர முடியும்.

“கடல் நீருடன் நல்ல தண்ணீரைக் கலந்து நீர் பாய்ச்சி கோதுமை, கம்பு, புகையிலை, பார்லி, மற்றும் பிற பயிர் வகைகளை சாகுபடி செய்ய முடியுமென்பதை விஞ்ஞானிகள் மெய்ப்பித்துக் காட்டியுள்ளனர்.

“கிழக்கு-மேற்கு பருவக் காற்று வீசும் பகுதிகள், கடல் நீர்ப்பாசன சாகுபடிக்கு மிகவும் ஏற்ற இடமாகும்.

“கடல் நீரைப் பாய்ச்சினால் 40லிருந்து 50 சதவிகிதம் வரை மகசூல் குறைவாகக் கிடைக்கிறது என்ற போதிலும், இந்தத் தானியங்களில் மற்ற இடங்களில் பயிராகும் தானியங்களிலுள்ள எல்லா அம்சங்களும் உள்ளன; மனிதர்கள் உண்பதற்கு ஏற்றவையே!”

இந்த விவரங்களை, பவநகரில் உள்ள உப்பு -- கடத்துறை இரசாயன ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநர் டாக்டர் தந்தார் தெரிவித்துள்ளார்.

“ஜெர்மனி, இஸ்ரேல், இத்தாலி, ஸ்பெயின், சுவீடன், இரஷ்யா முதலிய நாடுகளில் கடல் நீரைப் பாய்ச்சி சாகுபடி செய்து ஏராளமான உணவுத் தானியங்களை விளைவிக்கிறார்கள்; இந்நாடுகளின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, பவநகர் கழகத்தில் சோதனைகள் நடத்தப்பட்டன” என்றும் அவர் சொன்னார்.

குளிர் போக்கும் குப்பை கூளம்!

பிரிட்டனில் புதிய முறை

வெப்ப நாடுகளில் வெப்பத்தைக் குறைக்க ‘ஏர்-கண்டிஷன்’ போன்ற குளிர்ச் சாதனங்கள் பயன்பட்டு வருவதைப்போலவே, குளிர் நாடுகளில் வீடுகளின் ஒவ்வோர் அறையிலும் வெப்பமூட்டும் கருவிகள் பொருத்தப்படுவது வழக்கம்,

பிரிட்டனில் இதற்காக அதிக விலையுள்ள நிலக்கரியை வாங்கி இயந்திர முறையில் அதனை எரித்து, அதிலிருந்து உண்டாகும் வெப்பத்தைக் குழாய்கள் மூலம் வீடுகளுக்கு ‘சப்ளை’ செய்துவந்தனர். நிலக்கரியின் விலைக்கேற்பவும், மற்ற சாதனங்களின் விலைக்கேற்பவும் இப்படி சப்ளை செய்யப்படும் வெப்பத்திற்கும் கட்டணம் வாங்கி வந்தனர் -- மின்சாரத்திற்கு கட்டணம் வசூலிப்பதுபோல்; ஆனால், இந்தக் கட்டணம் அதிகமாக இருப்பதாகக் கருதப்பட்டது.

இதற்காக இப்போது புது முறையில வெப்பம் தயாரிக்க முயன்றுள்ளனர். காசு கொடுத்து நிலக்கரி வாங்காமல், நகர்ப்புறங்களில் வீணாகும் குப்பை போன்ற கழிவுப் பொருள்களை உரிய இயந்திரங்கள் மூலம் எரித்து -- அதிலிருந்து உண்டாகும் வெப்பத்தை சப்ளை செய்ய முனைவந்துள்ளனர்.

பெரிய தொழிற்சாலைகளுக்கும் வீடுகளுக்கும் இந்த வகையில் வெப்பம் சப்ளை செய்யும் முறை முதலில் பிரிட்டனில் நாட்டிங்காம் நகரில் அறிமுகப்படுத்தப்படுகிறது.

எரிப்பதற்குப் பயனாகும் புதுவகை இயந்திரத்தின் மூலம் 40 ஆயிரம் மக்கள் உள்ள நகரத்திற்குத் தேவையான வெப்பம் சப்ளை செய்யலாம் என்று கருதப்படுகிறது.

ஓர் ஆண்டில் 1,70,000 டன் குப்பை கூளங்களை சுகாதாரத்திற்குக் கேடு இல்லாமல் எரிக்க முடியும். இதனால் உற்பத்தியாகும் வெப்பம, 40,000 டன் நிலக்கரியை எரிப்பதனால் உண்டாகும வெப்பத்திற்குச் சமமானதாகும்!

இசை மூலம் முட்டையிடுவது அதிகரிப்பு!

ஜெர்மன் தொழில் துறையில் வளர்ச்சியும், உற்பத்தித் திறனும் கணிசமான அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்றாலும், கோழி வளர்ப்புத் துறையில் எல்லாவற்றையும் மிஞ்சும்படி வளர்ச்சி இருந்து வருகிறது.

சென்ற பதினைந்து ஆண்டுகளில் கோழி முட்டை உற்பத்தியின் மதிப்பு 114 கோடி ஜெர்மன் மார்க்குகளிலிருந்து 268 கோடி ஜெர்மன் மார்க்குகளுக்கு உயர்ந்துள்ளது.

தனிப்பட்ட பெட்டைக் கோழியொன்று 1930-ம் ஆண்டில் ஓர் ஆண்டுக்கு 92 முட்டைகள் இடும்; 1950-ல் இது 130 ஆக உயர்ந்தது. இப்போது நல்ல திடகாத்திரமுள்ள பெட்டைக் கோழி ஆண்டுக்கு 240 முட்டைகள் இடுகிறது. கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு ஒரு முட்டை வீதம் இனி இடலாம்.

சில கோழிகள் இனிய சங்கீதத்தைக் கேட்பதனால் அதிக முட்டைகளை இடுகிறதென்பது ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஹாலந்து, பெல்ஜியம், டென்மார்க், ஸ்வீடன் ஆகிய நாடுகளிலிருந்து முன்பு ஜெர்மனி ஏராளமான முட்டைகளை இறக்குமதி செய்து வந்தது. இப்போது முட்டைகள் இறக்குமதி அநேகமாக நின்று விட்டன. ஜெர்மனியின் முட்டைத் தேவையில் 90 சதவிகிதம், ஜெர்மன் கோழிகள் இடும் முட்டைகளே நிறைவு செய்கிறது.

இப்போது மேற்கு ஜெர்மனியிலுள்ள பெட்டைக் கோழிகளின் எண்ணிக்கை 640 இலட்சம். பதினொரு விவசாயிகளில் ஒருவர் கோழிப் பண்ணையை வைத்தே தான் வாழ்க்கை நடத்துகிறார்.

இப்போது ஒருவர் ஆண்டுக்கு 248 முட்டைகளை உண்டு வருகிறார்; 1970-ல் ஒருவர் ஓர் ஆண்டுக்கு 330 முட்டைகளை உண்பார் என்று எதிர்பார்க்கலாம்.

மூளையைத் தாக்கும் மலேரியா நோய்

குணப்படுத்த சக்திவாய்ந்த புதிய மருந்து கண்டுபிடிப்பு

மலேரியா நோயில் பலவகை உண்டு; அத்தனை வகைக்கும் காரணம் கொசுதான்; ஆனாலும் மூளையைச் சென்று தாக்கும் மலேரியாதான் மிகவும் கொடுமையானது. இந்தத் தாக்குதலுக்கு ஆளானவர்களில் நூற்றில் பத்து பேர் பிழைப்பதே கடினம்!

இந்த வகைக்கு ஒரு புதிய--சக்திவாய்ந்த மருந்தைப் பிரிட்டனில் கண்டுபிடித்துள்ளனர்.

‘டெக்காமெதாசோன்’ என்பது அதன் பெயர்--ஊசி மூலம் செலுத்தப்படுவது---இதுவரை பயன்பட்டு வந்த மருந்துகளைவிட 30 மடங்கு அதிக சக்திவாய்ந்தது!

மிகவும் சக்திவாய்ந்த மருந்தாகையால, துரிதமாக வேலை செய்து நோயைக் குணப்படுத்துகிறது. ‘இதனை உலகெங்கும் பரப்ப முயற்சிகள் எடுக்க வேண்டும்’ என்று மருத்துவ நிபுணர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சென்னை 97-வது வட்ட எம்.ஜி.ஆர். சுடரொளி மன்றம்

சைதை வெங்கட்ராமன் நகரில் உள்ள எம்.ஜி.ஆர். சுடர் ஒளி மன்றத்தின் நிர்வாகிகள் தேர்தல் 97-வது வட்ட தி.மு.க. செயலாளர் ஒய். எம். சேகர் முன்னிலையில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :—

தலைவர்: அ. சந்திரசேகரன்; செயலாளர்: டி. கோவிந்தன்; துணைச் செயலாளர்: கே. சுப்பிரமணி; பொருளாளர்: டி. மோகன்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆசிரியருக்குப் பதில் இயந்திரம்!

ஆசிரியர் இல்லாமலே சிறுவர்களுக்குப் பாடம் கற்பிக்கவும், மாணவர்கள் சரியாகப் பதில் சொல்லும்போது தட்டிக் கொடுக்கவும், தவறாகப் பதில் சொல்லும்போது ‘சூட்டு’ வைக்கவும் அற்புதக் கருவி ஒன்றை பிரிட்டிஷ் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

இந்தக் கருவியை இயக்குவது மிகமிக எளிது. மேஜை விளக்கின் ‘சுவிட்ச்’ போன்ற ஒரு பித்தானைத் தட்டிவிட வேண்டும் — அவ்வளவுதான்!

தொட்டால் இயங்கும் இந்த ‘இயந்திர ஆசிரியர்’ ஒரு குட்டி டெலிவிஷன் போன்று இருக்கும்; பாடங்கள் கற்பிக்கும் ‘சிலைடு’கள் இதன் பின்புறத்தில் வைக்கப்பட்டிருக்கும்; மறுபுறத்தில் ஒரு சிறிய திரை இருக்கும்; இந்தத் திரை நீளவாட்டத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கும். பித்தானைத் தட்டி இயந்திரத்தை இயக்கினால் பின்னால் உள்ள சிலைடுகளிலிருந்து மூன்று படங்கள் திரையின் கீழ்ப் பகுதியில் விழும். இந்தப் படங்கள் கீழே விழும்போதே மேல் பகுதியில் இவற்றில் ஒன்றின் பெயர் எழுத்துக்களில் காணப்படும்.

எந்தப் பொருளின் பெயர் எழுதப்பட்டிருக்கிறது என்று குழந்தை நினைக்கிறதோ அந்தப் படத்தைக் கையால் தொடவேண்டும். உதாரணமாக அணில்—ஆடு—இலை ஆகிய மூன்று படங்களும் கீழே காட்டப்படுகின்றன; மேலே, ‘அணில்’ என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால், குழந்தை அணில் இடத்தைத் தொட்டால், ‘சரி’ என்று அந்த இயந்திரம் சொல்லிவிடும். அப்படியில்லாமல், அணில் என்று எழுதியிருக்கும்போது ஆடு அல்லது இலை படத்தைக் குழந்தை தொட்டால், ‘தப்பு’ என்று சொல்லிவிட்டு, சரியான படத்தைத் தொடும்வரை மாறாமல் அப்படியே இருக்கும். சரியான படத்தைத் தொட்ட பிறகுதான் அடுத்த ‘சிலைடு’ திரையில் விழும்படி இதில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்படி எழுத்தைக் காட்டி, படத்தைக் காட்டி மெல்ல மெல்லக் கற்பித்து வருகின்ற இந்த இயந்திரத்தின் பின்னால் ஒரு மீட்டர் பொருத்தப்பட்டுள்ளது.

செவிடு, ஊமை போன்ற இயற்கைக் குறை உள்ள குழந்தைகளுக்குப் பாடம் கற்பிக்க மிகவும் ஏற்றது.

கையில்லாத குழந்தைகளுக்கும் இது மிகவும் ஏற்றது; எப்படி என்றால், இதன் மூலம் படிக்கும் குழந்தைகள் எழுத வேண்டிய அவசியமே இல்லை. பள்ளிக்கூடத்திற்குச் சென்றுதான் படிக்க வேண்டும் என்பதில்லாமல், வீட்டிலேயே படித்துக்கொள்ளலாம்.

குழந்தைகள் உள்ள வீடுகளில் பொம்மைகள் எப்படி நிச்சயமோ அதுபோல் இந்த இயந்திரமும் முக்கிய இடம்பெற்று வருகிறது. குறை ஏதும் இல்லாவிடினும் சராசரிக்கும் கீழான குழந்தைகள், விரைவாகவும் தெளிவாகவும் பாடம் பயில இந்தக் கருவி பயன்படுகிறதே; கேட்டோ, படித்தோ புரிந்துகொள்வதைவிட பார்த்துப் புரிந்துகொள்வது குழந்தைகளுக்கு எளிதாக இருப்பதுடன், விரைவாகவும், ஆழமாகவும் புரிந்து கொள்ள இது வாய்ப்பளிப்பதால் தான் இந்த அற்புத இயந்திரத்திற்கு மிக நல்ல வரவேற்பு இருக்கிறது!

கரூர் வர்த்தகக் கழகம்

1—9—68 அன்று கரூர் வர்த்தகக் கழகப் பேரவைக் கூட்டம் திரு. ஆதி. வி. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது புதிய ஆண்டுக்கான நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர் : ஆதி. வி. இராமச்சந்திரன்; துணைத் தலைவர்: என். ஆர்.எம். குழந்தைவேல்; செயலாளர்: என் ஆர்.எம். பத்மநாபன்; பொருளாளர்: கே. நல்லசாமி; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 20 பேர்.

உணர்வோர் உள்ளம்

பாங்கி வசதி தேவை

ஐயா,

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்திலுள்ள தாரமங்கலத்தில் பல அரசினர் அலுவலகங்கள், தனியார் துறை நிறுவனங்கள் உள்ளன.

இவ்வூருக்குப் பாங்கி வசதி ஒன்றுகூட இல்லாதது பெருங்குறையாகும். சுமார் 20 ஆயிரம் மக்கள் தொகையுள்ள இவ்வூரில் அரசினர் ஸ்டேட் பாங்கியின் கிளை ஒன்று இருப்பின், இங்குள்ள அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சென்னையிலுள்ள அரசாங்க பாங்கியின் மேலதிகாரிகள் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

ஏ. நடராசன்,
தாரமங்கலம்

டிரைவர் இல்லாமல் இயங்கும் இரயில்!

இலண்டன், செப். 7—

பாதாள இரயில் இலண்டன் நகரில் நெடுங்காலமாக இருந்து வருகிற போக்குவரத்துச் சாதனமாகும். இந்த இரயில் பாதையில், தானே இயங்கும் இரயில் வண்டிகளை செலுத்தப்போகிறார்கள்.

இலண்டன் விக்டோரியா இரயில் நிலையத்திலிருந்து நான்கு முக்கிய நகரங்களை இணைக்கும் 14 மைல் நீளப் பாதையில், தானே இயங்கும் இரயில் வண்டிகள் அறிமுகம் ஆகின்றன.

ஒரு மணி நேரத்தில் குறிப்பிட்ட திசையில் 25,000 மக்கள் பயணம் செய்வதற்கு ஏற்றதாக இந்த இரயில் வண்டிகள் இருக்கும் என்று கருதப்படுகிறது

இந்தப் புதிய பாதாள இரயில், தரைக்கடியில் 70 அடி ஆழத்தில் பாதை அமைக்கப்பட்டு அதில் ஓடப்போகிறது.

இரயில் வண்டிகளும் தாமே இயங்குபவை; அத்துடன் பயண டிக்கெட் விற்பனையும் இயந்திரம் செய்யப்போகிறது.

கட்டண வசூலையும் இயந்திரம் செய்யப்போகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

புதிதாகப் புழக்கத்திற்கு வரவிருக்கும் இரயில் வண்டிகளில் ஓட்டுபவர் இருக்கமாட்டார்: கொடி காட்டும், ‘கார்டும் இருக்கப்போவதில்லை; இவர்களுக்குப் பதிலாக ஒரே ஒரு இயக்குநர் மட்டும் இருப்பார்; வண்டியின் கதவுகள் மூடுவதற்கு ஒரு ‘சுவிட்ச்’ —வண்டி ஓடுவதற்கு ஒரு ‘சுவிட்ச்’ —இரண்டையும் தட்டிவிட வேண்டியதுதான் இவருடையவேலையாகும்.

வண்டி புறப்பட்டு அடுத்த நிலையம் வந்ததும வண்டியை நிறுத்தும் ‘சுவிட்ச்’—கதவுகளைத் திறக்கும் ‘சுவிட்ச்’ இரண்டையும் இவர் இயக்கவேண்டும்; இவ்வளவுதான் இவரது வேலையே!

ஒரு நிலையத்திலிருந்து வண்டி புறப்பட்டுவிட்டால், அடுத்த நிலையத்திற்கு வந்து நிற்கும்வரை அத்தனை வேலைகளையும் — கை இறக்காத இடங்களில் நிறுத்துவது, ஊதுவது, வேகத்தைக் குறைத்தோ கூட்டியோ ஓட்டுவது போன்ற வேலைகளை—செய்வது எலக்ட்ரானிக் மூளை!

அதுமட்டுமல்ல; மற்றொரு முக்கிய முன்னேற்றமும் உண்டு. குறிப்பிட்ட நிலையத்தில் அதே தண்டவாளத்தில் ஏற்கனவே ஒரு வண்டி நின்றிருந்தால், கணிசமான தொலைவிலேயே பின்னால் வரும் வண்டி தானே நிறுத்தப்பட்டுவிடும்; மோதல் தவிர்க்கப்பட்டுவிடும்.

தானே இயங்கும் கருவிகள் ஏதேனும் பழுது ஏற்பட்டு வேலை செய்யவில்லையென்றால், என்ன செய்வது? எல்லா இயந்திரங்களையும் மூடிவிட்டு, டிரைவர்கள் ஓட்டும் சாதாரண இரயிலாக சில நிமிடங்களில் மாற்றிக்கொள்ளலாம், எனவே, ‘இயந்திரங்களில் பழுது ஏற்பட்டால் என்ன செய்வது --- பாதையிலேயே நிற்க வேண்டிவருமோ’ என்ற பயமே இல்லை!

நோய்த் தடுப்பில் நமது சாதனைகள் போதாது

தொத்து நோய்களை எதிர்த்துத் தீவிரமாகப் போராட வேண்டும்

குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் வற்புறுத்தல்

வேலூர், செப். 10—

"நம் மக்களைத் துன்புறுத்திவரும் பல நோய்களுக்கு மூலகாரணம், போதிய சக்தியின்மை—மோசமான சுகாதார வசதிகள்—குடிநீர் வசதி போதாமை—தொத்து நோய் பரவுவதற்கேற்ற சூழ்நிலை ஆகியவைகளே என்பதைக் கண்டறியலாம். இந்தத் துறையில் ஏற்பட்டுள்ள பொருள் அறிவின் முன்னேற்றத்தைப் பயன்படுத்திக்கொண்டு—இடைவிடாமல் முயன்று—நோய்கள் பரவாமல் தடுத்து—மக்களின் உடல்நலனைப் பெருக்க வேண்டும்.

"நாம் கண்டுள்ள சாதனை போதாது; பல நாடுகளுடன் ஒப்பிடுகையில், நாம் இன்னும் எவ்வளவோ பின்தங்கியுள்ளோம். நமது மக்களின் நோயற்ற நிலைமை இன்னமும் மோசமாகவே இருக்கிறது; நோய்களால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகமாக இருந்துவருகிறது"

என்று, குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன், வேலூரில் அரசினர் பெண்ட்லண்ட் மருத்துவமனையின் பொன்விழாக் கொண்டாட்டத்தைத் துவக்கிவைத்தும், பொன்விழா நினைவு வார்டுக்கு அடிக்கல் நாட்டியும் பேசுகையில் சுட்டிக்காட்டினர்.

பொன் விழாக் கொண்டாட்டத்தையொட்டி நடக்கும் மருத்துவக் கண்காட்சியை ஆளுநர் உஜ்ஜல் சிங் திறந்துவைத்தார்.

கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமைதாங்கினர்.

சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா நினைவு மலரை வெளியிட்டார்.

அரசினர் பெண்ட்லண்ட் மருத்துவமனை முதன்முதலாக 1882-ல் நகராட்சி மருத்துவமனையாகத் துவக்கப்பட்டது. 1915-ம் ஆண்டில் இப்போதுள்ள இடத்திற்கு மாறியது; அப்போது கவர்னராக இருந்த பெண்ட்லண்ட்பிரபு இதைத் திறந்து வைத்தார்; அவரது பெயரே இதற்கு வைக்கப்பட்டது.

1918-ம் ஆண்டில், மாநில அரசு இதை மேற்கொண்டது.

இங்கு 375 பேர் தங்கியிருந்து சிகிச்சை செய்துகொள்ள வசதிகள் உள்ளன; நவீன சாதனங்கள் உள்ளன.

வேலூரிலுள்ள மிஷன் மருத்துவமனையைச் சேர்ந்த நிபுணர்கள் வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் இங்கு வந்து சிகிச்சையளிக்க வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

நோய்களை எதிர்த்துப் போர்

குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"பொதுச் சுகாதாரம், நோய்த் தடுப்பு முதலிய துறைகளில், சுதந்தரத்துக்குப் பின்னர் இந்தியாவில் பெரும் அளவில் முன்னேற்றம் கண்டுள்ளோம்; இருப்பினும் இன்னும் எவ்வளவோ முன்னேறியாக வேண்டியிருக்கிறது.

சராசரி ஆயுட்காலம் உயர்ந்திருப்பதும், மரண விகிதமும், குழந்தை மரண விகிதமும் குறைந்திருப்பதும், மக்கள் தொகை உயர்ந்து வருவதும், சுகாதாரம் -- மருத்துவம் ஆகிய துறைகளில் தரம் உயர்ந்திருப்பதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

மலேரியாவைப் பெரும்பாலும் ஒழித்துவிட்டோம்; பிளேக், காலரா, க்ஷய நோய், குட்டம் போன்ற தொத்து நோய்களைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம், பயங்கர நோய்களை எதிர்த்து நடத்தும் போராட்டத்தைத் தீவிரமாக நடத்திவருகிறோம்.

மருத்துவ வசதிகள் செய்து தருவதில் மாவட்டத் தலைநகர மருத்துவமனைகளுக்கு முக்கியமான பங்கு உண்டு,

கடமையுணர்வு நிறைந்த ஊழியர்களும், நல்ல சாதன வசதிகளும், கட்டிட வசதிகளும் வாய்ந்த பெண்ட்லண்ட் மருத்துவமனை, இந்தப் பணியைச் சிறப்புற நிறைவேற்றிவருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்; பல துறைகளில் இந்த மருத்துவமனை கண்டுள்ள நீடித்த முன்னேற்றத்தைப் பாராட்டுகிறேன்."

தெ. ஆ. மாவட்டக் கழகத் தேர்தல்

தென் ஆற்காடு மாவட்ட தி.மு. கழகத் தேர்தல் 13—9—68 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கடலூர் (என்.டி.) முனிசிபல் பயணியர் விடுதியில் நடைபெறும். தேர்தல் ஆணையாளர் : தோழர் அப்துல் காதர் பி.எஸ்சி.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தர்மபுரி மாவட்ட தி. மு. க. தேர்தல்

24--9--68 காலை 10-மணிக்கு

தர்மபுரி மாவட்ட தி. மு. கழகத் தேர்தல், 24—9—68 செவ்வாய் காலை 10-மணிக்கு தர்மபுரி விவேகானந்தா நகர மாளிகையில் நடைபெறும். தேர்தல் ஆணையாளர் பெயர் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமை நிலையம் (தி.மு.க.)

மத்திய பிரதேச அமைச்சரவை கவிழுமா?

போபால், செப். 9—

மத்தியப் பிரதேசக் கூட்டணி அரசுமீது சட்டமன்றத்தில் காங்கிரசுக்காரர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு சட்டமன்ற அவைத் தலைவர் அனுமதியளித்தார்.

சட்டமன்றக் காங்கிரசுக் கட்சித் தலைவரான டி. பி. மிஸ்ரா இத்தீர்மானத்தைக் கொண்டுவந்தார்; எதிர்க் கட்சியினர் இத்தீர்மானத்தை ஆதரித்தனர்.

கூட்டணி அமைச்சரவை 14 மாதங்களாகப் பதவியிலிருக்கிறது; காங்கிரசின் தீர்மானத்தைச் சில எதிர்க் கட்சிகள் ஆதரித்தன; இவை அண்மையில் கூட்டணியிலிருந்து வெளியேறியவை.

கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர் கொணர்ந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் போதிய ஆதரவு பெருததால் அனுமதிக்கப்படவில்லை.

முதலமைச்சர் சிங் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தீர்மானத்திற்திப் பயந்து அவையின் கூட்டத்தை ஒத்திவைக்கப் போவதில்லை; துணிவுடன் அதை எதிர்ப்பேன்; பெரும்பான்மை பலத்தை இழந்தால் உடனே பதவியைத் துறப்பேன்; நான் டெல்லிக்கு ஓடப்போவதில்லை!

"இந்த அமைச்சரவை தோற்கடிக்கப்பட்டால் நாம் இடம் மாறி உட்காரப்போகிறோம் --- அவ்வளவுதான்!"

சென்னை மாவட்ட தி. மு. கழகம்

பகுதி--கிளை--துணை மன்ற செயலாளர்கட்கு அழைப்பு

"பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு 22-9-68-ல் நடைபெறவிருக்கும் மாபெரும் ஊர்வலம் -- பொதுக்கூட்டம் ஆகியவற்றைச் சிறப்புற நடத்துவது குறித்து, சென்னை மாவட்ட பகுதி – கிளை – துணை மன்றச் செயலாளர்களின் கூட்டம், 12-9-68 மாலை 5 மணிக்கு தேனாம்பேட்டை 'அன்பக'த்தில் நடைபெறும்; கிளைக் கழகச் செயலாளர்களும், துணை மன்றச் செயலாளர்களும் இதனையே அழைப்பாக ஏற்று தவருமல் வருகைதர வேண்டுகிறேன்"

என்று, மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் கேட்டுக்கொள்கிருர்.

முதலமைச்சர் பொறுப்புகள்

ஏனைய அமைச்சர்கள் ஏற்றனர்

சென்னை, செப். 10—

முதலமைச்சர் அண்ணா அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லதை முன்னிட்டுத் தற்காலிக முதலமைச்சராக யாரும் நியமிக்கப்படவில்லை.

முன்பு அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்றிருந்தபோது, முதலமைச்சரின் துறைகள் எந்தெந்த அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனவோ அந்தந்த அமைச்சர்களிடம் இப்போதும் அந்தத் துறைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மதுவிலக்கு உட்படக் காவல் துறைப் பொறுப்பை கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

தேர்தல் உட்படப் பொதுத் துறை நிர்வாகம், பொதுப் பணி அமைச்சர் கருணாநிதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தி, கடல் கடந்த இந்தியர், அகதிகள் பராமரிப்பு ஆகிய துறைகளை உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

திட்டமிடும் துறை, சட்ட அமைச்சர் மாதவனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

சிரணிப் பொறுப்பு, உள்ளாட்சி அமைச்சர் திரு. முத்துசாமியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

'கல்விக்கு நல்ல திட்டம் தேவை'

'பணம் மட்டும் அதனை வளர்த்துவிடாது'

வேலூர் நகராட்சி வரவேற்பில் குடியரசுத் தலைவர் பேச்சு

வேலூர், செப். 10—

வேலூர் நகராட்சி, கோட்டை மைதானத்தில், குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேனுக்கு சிறப்புமிக்க வரவேற்பு அளித்தது.

நகராட்சித் தலைவர் மா. பா. சாரதி, வரவேற்பு இதழை சந்தனப் பேழையில் வைத்து அளித்தார்.

விழாவுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் கூறியதாவது :—

"வரலாறு என்பது, தொடர்ந்து எழுதப்படுவதாகும்; இன்றைய நிகழ்ச்சியும் சரித்திரத்தில் இடம் பெறும்; கடந்தகால நிகழ்ச்சிகளை விட இவை, பெருமை மிக்கதாக அமையலாம்.

"தனது வருவாயில் கால் பகுதியைக் கல்வித் துறைக்குச் செலவிட்டு, அத்துறையின்பால் காட்டும் ஆழ்ந்த அக்கறைக்காக வேலூர் நகராட்சியைப் பாராட்டுகிறேன்.

"நகராட்சி, தன்னுடைய வருமானத்தை இன்னும் அதிகமாக்கி, கல்விக்காக மேலும் அதிகப் பணம் செலவு செய்ய வேண்டும்; என்ருலும், பணம் மட்டும் கல்வியை வளர்த்துவிடாது; அதற்கு நல்ல திட்டம் தேவை."

விழாவுக்குக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமை தாங்கினர்.

மாவட்ட கலெக்டர் பெல்லியப்பா வரவேற்றுப் பேசினர்.

சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா பேசுகையில், 'தமிழ்நாட்டு மக்களின் நல்லெண்ணத்தை இந்திய மக்களுக்கு எடுத்துக் கூறும் விழா இது' என்ருர்.

பென்ஸ் கிளப் சார்பில், பெண்ட்லண்ட் மருத்துவமனை பொன்விழா நிதிக்காக ரூ. 10,000 குடியரசுத் தலைவரிடம் வழங்கப்பட்டது; இந்த நன்கொடைத் தொகையை, மாவட்டக் கலெக்டரிடம் குடியரசுத் தலைவர் அளித்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின்
60-ம் ஆண்டு பிறந்த நாளையொட்டி
'நம் நாடு'
சிறப்பு மலர்
14--9--68 அன்று வெளிவரும்
★ குறைந்த விலையில்---
★ சிறந்த முறையில்---
தயாராகிறது!
★
விலை 50 காசு
'நம் நாடு' — இராயபுரம் — சென்னை - 13

சென்னை நகர தி.மு.க. தோழர்களுக்கு மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

"பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாளை முன்னிட்டு, 16-9-68 முதல் 22-9-68-வரை, சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நகரில் பரவலாக பல நிகழ்ச்சிகள் நடைபெற இருப்பதால், மேற்படி நாட்களில் இதர கழகச் சார்புடைய அமைப்புகள் வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய வேணடாமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்"

என, மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிருர்.

அத்தாணி பாபு

சுற்றுப்பயணம்

செப். 15: விராளியூர்; 17: பெரியநாயக்கன்பாளையம்; 18: கணபதி; 20, 21, 22: அவிஞசி வட்டம்; 23: சூலூர்; 24: தாரை வட்டம்; 26: பலலடம் வட்டம்.

ரோஜா
பாக்கு &
புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிஞர் அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-13) [illegible]